Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 53

வியாழக்கிழமை
18 ஜனவரி 2024

தை 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கோத்தா அப்ப அநியாயம் செய்தார், நீதிமன்றம் இப்ப நிண்டு செய்திருக்கு பாருங்கோ"

# கோத்தாபயவின் பொதுமன்னிப்பு சட்டத்துக்கு முரண்

துமிந்த விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

இலங்கை வரலாற்றில் இதுவே முதன்முறை

**கொழும்பு, ஜனவரி 18**

**கொலை வழக்கில் தண்டனைக் கைதியான துமிந்த சில்வாவுக்கு, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வழங்கிய பொதுமன்னிப்பு சட்டத்துக்குப் புறம்பானது என்று உயர்நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பளித்துள்ளது. ஜனாதிபதி ஒருவரின் பொதுமன்னிப்பு செல்லுபடியற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பளிப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.**

☞ 11

# நாட்டு நலனுக்காகவே துமிந்தவுக்கு மன்னிப்பு

## கோத்தாவின் காரணம் இது

கொழும்பு, ஜன.18
நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டே துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கினேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச. நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

☞ 11

# மற்றொரு பொதுமன்னிப்பும் நீதிமன்றத்தில்

முல்லைத்தீவு, ஜன.18
'ஜனாதிபதி ஒருவரின் பொதுமன்னிப்புசெல்லுபடியற்றது என்று இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

☞ 11

# ரணிலை பாராட்டும் ஜோர்ஜீவா

கொழும்பு, ஜன.18
இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகளை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா

☞ 11



# யாழ்ப்பாணத்தில் இன்று டெங்கு ஒழிப்புத் திட்டம்!

## கொக்குவில் கிழக்கிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றுமுதல் விசேட டெங்கு ஒழிப்புவேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.
இது தொடர்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 11

# விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

☞ 11

# நாளை ஆரம்பமாகின்றது சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

## 64,000 பார்வையாளர்கள் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.18
நாளை ஆரம்பமாகவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தைக்கு 64 ஆயிரம் பார்வையாளர்களை எதிர்பார்த்துள்ளோம் என்று யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே.விக்னேஷ் தெரிவித்தார்.
லங்கா எக்ஸிபிஷன் நிறுவனம் மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் இணைந்து நாளைமுதல் எதிர்வரும் 21ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தச் சந்தையை 14 ஆண்டாக

☞ 11

14 EDITION Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2024
JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம்
இன்னும் 1 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

# ஐ.நா. பேரவைத் தீர்மானத்தை நலிய வைக்க ரணில் முயற்சி

## செங்கடலுக்கு கப்பல் அனுப்பியதும் அதன் ஒரு பகுதியே

கொழும்பு, ஜன.18
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்தை நீர்த்துப்போகச் செய்யும் முயற்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. அதில் இலங்கைக்கு எதிரானத் தீர்மானம்

☞ 11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழ அறுவடை இந்தாண்டு உயர்வு

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் மாம்பழ அறுவடை இந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டில் நீடித்த வறண்ட காலநிலையும், அதைத் தொடர்ந்து பெய்த மழையும் மாம்பழ அறுவடையை அதிகரிக்கச் செய்துள்ளன.

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பக் கழகத் தரவுகளின்படி, இலங்கையில் விளையும் அனைத்து வகையான மாம்பழங்களின் வருடாந்த அறுவடையும் சுமார் 250 மில்லியன் பழங்கள் என கணிக்கப்பட்டுள்ளது. அறுவடை அதிகரித்தமையால் சந்தையில் மாம்பழங்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ச-இ)



# வடமராட்சி தெற்கில் டெங்குத் தடுப்பு துரிதம்

யாழ்ப்பாணம், ஜன. 18

வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கரவெட்டி பிரதேசசபைக்குட்பட்ட 35 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கடந்த 2ஆம் திகதி தொடக்கம் பிரிவு ரீதியாக தினந்தோறும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் இடம்பெறுகின்றது.

பின்னர் வாராந்தம் வெள்ளிக்கிழமை ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்து டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பிரதேசசபை தெரிவித்துள்ளது. (ச-27)



யாழ்ப்பாணம், அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சை நிலையம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. கர்ப்பிணிப் பெண்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான சிகிச்சையை வழங்குவதில் சிரமத்தை எதிர்கொண்டு வந்த அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் நீண்டகாலத் தேவையினை

நிறைவேற்றும் பொருட்டு, பத்தமேனியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவானந்தனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் முழுமையான நிதியுதவியில் இந்த சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. (ப-ம-20-26)

நாட்டை மீட்க

# ரணிலின் வழியே ஒரே வழி!

சொல்கிறார் வஜிர



**கொழும்பு, ஜன.18**

**நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தைத் தவிர வேறு வழியில்லை. அனைத்துத் தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து அந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்குப் பங்களிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அதைச் சீர்குலைக்க சில தரப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளை இனங்கண்டு தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது, அரசியல் செய்யும் திறமை இந்த நாட்டில் எவருக்கும் இருக்கவில்லை. மூன்று வருடங்களாகத் தடைப்பட்டிருந்த அபிவிருத்திச் செயற்பாடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்க முடிந்துள்ளது. ஆனால், சில கட்சிகள் நாட்டின் அபிவிருத்திப் போக்கை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. அந்தக் குழுவினரே வேலை நிறுத்தங்களை ஆரம்பித்துள்ளனர். இங்குவரும் சுற்றுலாப் பயணிகளைக் குறைக்க முயற்சிக்கின்றனர். இதனால் நாட்டுக்குப் பல பில்லியன் டொலர் இழப்பு ஏற்படலாம் என்றும் வஜிர அபேவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (அ-எ-44)

# இந்திய மீனவர்கள் 18 பேருக்கு மறியல்

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இரு இழுவைப் படகுகளில் வந்து இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் இழுவைப் படகுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு, நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-60)

# யால பூங்காவுக்கு கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜன. 18

'வற்' அதிகரிப்பால் யால தேசிய பூங்கா அனுமதிச் சீட்டுகளின் விலை 3 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அதன் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வெள்ளப்பாதிப்பால் மூடப்பட்ட யால தேசிய பூங்கா மீளவும் திறக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக விடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# 14,294 பண்ணைகள் இலங்கையில் மூடல்

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் 14 ஆயிரத்து 294 பால் பண்ணைகள் மூடப்பட்டுள்ளன என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை திட்டமிடல் பணியகம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கையில் 14 ஆயிரத்து 294 பால் பண்ணைகள் மூடப்பட்டுள்ளன. கால்நடைத் தீவனங்களின் விலையுயர்வு, மருந்துப்பொருள்களின் விலையுயர்வு, உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாமை, உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்காமை என்பனவே இலங்கையில் பண்ணைகள் மூடப்பட முக்கியமான காரணம் என்று தெரியவருகின்றது. (ம)

# சஜித் களமிறங்காவிடில் அரசியலிலிருந்து ஓய்வு!

சமிந்த தெரிவிப்பு

அடுத்தத் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ களமிறங்காவிட்டால் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறுவேன் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி, கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே களமிறங்கவேண்டும். அவருக்கு ஆதரவாக நாம் செயற்படுவோம். சஜித் பிரேமதாஸ போட்டியிடாவிட்டால் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறுவேன். அநுரகுமார திஸாநாயக்க அரசியலில் தூய்மையானவர் எனக் கூறப்படுமானால் அந்தக் கருத்தை ஏற்கமுடியாது. அவர்களும் அரசுகளில் அங்கம் வகித்தவர்கள். ஜே.வி.பி.யினரால் 'பைல்'களை மாத்திரமே வெளிப்படுத்திக்கொண்டிருக்க முடியும் - என்றார். (ம-44)

# விஜயின் வருகையால் சுற்றுலா பலம்பெறும்

கொழும்பு, ஜன. 18

தென்னிந்திய நடிகர் விஜய் இலங்கைக்கு வருவதன் ஊடாகப் பல மில்லியன் கணக்கான மக்களுக்கு இலங்கையின் சுற்றுலாத்துறை குறித்து விளம்பரப்படுத்த முடியும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க விசேட குழுவொன்றை நியமித்து தென்னிந்திய மற்றும் பொலிவூட் திரைப்படங்களுக்கு இலங்கையில் படிப்பிடிப்புகளை நடத்துமாறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

எதிர்காலத்தில் பல இந்திய நடிகர்கள் இலங்கைக்கு வர உள்ளனர். குறிப்பாக விஜய், சல்மான் கான் உட்படப் பலர் படப்பிடிப்புகளை நடத்த வருகை தர உள்ளனர். இவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் ஒரு பதிவை இட்டால் அது பல மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைகிறது. பிரபுதேவா உட்படப் பலர் இலங்கைக்கு வந்து சென்றுள்ளனர். இலங்கையின் சுற்றுலாத்துறை பல்வேறு வழிகளில் எதிர்காலத்தில் ஊக்கமடையும். அதேபோன்று படிப்பிடிப்புகளை நடத்துவதற்கு இலகுவான அனுமதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.' - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலை: பட்டமளிப்பு பிற்போடல்

யாழ்ப்பாணம், ஜன. 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. இதன்படி மார்ச் மாதம் 14, 15, 16ஆம் திகதிகளில் பட்டமளிப்பு நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பெப்ரவரி மாதம் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் இடம்பெறுவதாகவிருந்தது. இந்த நிலையில் மார்ச் மாதம் 14, 15 மற்றும் 16ஆம் திகதிகளில் பட்டமளிப்பு இடம்பெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

தைப்பொங்கலன்று

## ஆலயத்துக்கு அருகே அறுக்கப்பட்டது மாடு

வரணியில் பாதகம்

யாழ்ப்பாணம், ஜன. 18
வரணியில் உள்ள கோவிலுக்கருகில், தைப்பொங்கலன்று மாடொன்று சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்டுள்ளது.
மாட்டின் எச்சங்களை அவ்விடத்தில் வீசிவிட்டுச் சென்றமையால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
வரணியில் அண்மைக்காலமாக மாடுகள் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்படுவது அதிகரித்துள்ள போதிலும் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ச-9)



## சோழன் சாதனை நிகழ்வு

தலைமுடியால் ஆயிரத்து 550 கிலோ எடையுடைய வாகனத்தை தலைமுடியால் இழுத்த நபரொருவர் சோழன் சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவுசெய்துள்ளார். செல்லையா திருச்செல்வம் என்ற 60 வயதுடைய நபரே தலைமுடியால் வாகனத்தை இழுத்து சோழன் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவுசெய்தவராவார். கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ம-159)

## போதைக்கு அடிமையான கிராமஅலுவலர் மறியலில்


புதுக்குடியிருப்புப் பகுதியில் உயிர்கொல்லிப் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட கிராமஅலுவலர் உள்ளிட்ட இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கடந்த 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்போது மேற்படி கிராம அலுவலரும் பிறிதொருவரும் ஹெரொய்ன் மற்றும் ஐஸ் போதைக்கு அடிமையான நிலையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். இதையடுத்தே இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-19)

## கைக்குண்டுடன் கைதானவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜன. 18
இளவாலை, நாதவோலைப் பகுதியில் கைக்குண்டுடன் கைதான நபரொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இளவாலையில் இடம்பெற்ற திருட்டு தொடர்பில் சந்தேகநபரொருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், அவர் நாதவோலைப் பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டபோது அவருடைய உடைமையிலிருந்து கைக்குண்டொன்றும் மீட்கப்பட்டது. இதையடுத்து அவர் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 27ஆம் திகதிவரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
திருடப்பட்ட பொருள்களை சந்தேகநபரிடமிருந்து கொள்வனவு செய்த பிறிதொரு நபரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-125)

## பொலிஸ் அலுவலரொருவர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஜன. 18
கொழும்பு - முகத்துவாரம் பகுதியில் வைத்து பொலிஸ் அலுவலரொருவர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
போதைப்பொருளுக்கு எதிரான யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போதே 27 வயதான பொலிஸ் அலுவலர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து 2 கிராம் 140 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. முகத்துவாரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)



## போதை மாத்திரைகளுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார், ஜன. 18
மன்னார் தாழ்வுபாடு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்டசுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டதுடன், சந்தேகநபரிடமிருந்து ஒரு தொகுதி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-56)

## தினம் தெரியுமோ?

அமெரிக்க ஜனாதிபதி எலக்சனைக்கூடி சிம்பிளா வைச்சு முடிச்சுப்போடலாம், ஆனால் உந்தத் தமிழரசுக் கட்சியின்ர தலைவர் எலக்சனுக்கு மட்டும் ஏதோ செய்வினை சூனியம் வைச்ச மாதிரி, ஏதேதோ தடையள் எல்லாம் வந்தபடியே இருக்குது. எலக்சனுக்கு இன்னும் 3 நாள்தான் இருக்குது. முறைப்படி கட்சி எலக்சனுக்கு வாக்களிக்கத் தகுதியான பொதுச்சபை உறுப்பினர் மாருக்கு 14 நாளுக்கு முன்னம் கிடைக்கக்கூடிய மாதிரி அழைப்பு விட்டிருக்கோணும். ஆனால் இன்னமும் பொதுச்சபை உறுப்பினர்மாருக்கும் இந்த அழைப்பு வாய்மொழி மூலமோ இல்லாட்டி கடிதம் மூலமோ போகேலை. ஒருவேளை போனகிழமை கட்சியின்ர பொதுச்செயலாளர் பேப்பர்களுக்கு 'தேர்தல் முதலே சொன்ன திகதியில நடக்கும்' எண்டு ஒரு அறிக்கை விட்டவர். அதைத்தான் அவை பொதுச்சபை உறுப்பினர்களுக்கு விட்ட அழைப்பெண்டு நினைக்கினமோ தெரியேலை.

ஆனால் மற்றக்கூட்டங்கள் மாதிரி இந்தக் கூட்டத்துக்கு ரெலிபோனில சொல்லிப்போட்டு விடேலாது. ஏனெண்டால் இப்ப பொதுச்சபையில ஆரெல்லாம் இருக்கினம் எண்டு ஒருத்தருக்கும் சரியாத்தெரியாது. அதுக்காக பொதுச்சபை உறுப்பினர்மாருக்கு கடிதம் அனுப்பி, அந்தக் கடிதத்தோட வந்தால் மட்டும்தான் அவையை கூட்டம் நடக்கிற இடத்துக்குள்ள விடுவினம். அதுதான் ஏற்பாடாம். 'நாலு நாளைக்கு முதல் அழைப்புக்கடிதம் அனுப்பியாச்சு' எண்டு நேற்று மாவையர் சொல்லியிருக்கிறார். அப்பிடியிருந்தும் இன்னும் ஒருத்தருக்கும் எந்தவொரு கடிதமும் போகேலையாம். 14 நாளுக்கு முன்னம் அனுப்ப வேண்டிய கடிதத்தை, தமிழ்ப்பட ஹீரோ மாதிரி கடைசிநேரத்தில அனுப்பிறதெல்லாம் தமிழரசுக் கட்சியாலதான் முடியும்.

அழைப்புக் கடித விசயம் ஒருபக்கம் ஓடிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் இந்த எலக்சனை முன்னுக்கு நிண்டு நடத்தவேண்டிய பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தை கட்சித் தலைவர் முதற்கொண்டு ஆரும் தொடர்பு கொள்ளேலாமல் இருக்காம். சத்தியலிங்கத்தாருக்கு நுரையீரலில ஏதோ வருத்தமாம். அதால கதைக்கிறது கஷ்டம் எண்டு அவர் ரெலிபோன் ஒண்டையும் ஆன்ஸர் பண்ணுறேலையாம். இப்பிடி பொதுச்செயலாளரோட தொடர்பு இல்லாததால, என்னெண்டு எலக்சனை நடத்திறதெண்டு கட்சியின்ர உயர் மட்டக்காரர் கையைப் பிசைஞ்சு கொண்டிருக்கினம். அதேமாதிரி, பொதுச்செயலாளருக்கு வருத்தம் எண்டு சொல்லி, எலக்சனை பின்னுக்குப் போடப்போயினமோ எண்டு இன்னொரு தரப்பு சந்தேகப்படுகுது. நாளையிண்டைக்கு மத்திய குழுக்கூட்டமும் இருக்குதாம். பாப்பம், என்ன நடக்கப்போகுதெண்டு?

- பட்சி
padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 10 . 1946



மறைவு
17 . 01 . 2024

### கண்மலர்சோதி இரத்தினம் (தேவி அக்கா)

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கண்மலர்சோதி இரத்தினம் (தேவி அக்கா). நேற்று (17.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்பு மனைவியும், சிறிபாஸ்கரன் (கொழும்பு), சிறிதரன் (றஞ்சன்), சிறிகரன் (பின்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந்தி (கொழும்பு), சிவகௌரி, நிருபா (பின்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், இலக்கியா, ஆரணன், இனியன், அகரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவன் தெற்கு தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (18.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் விலங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பிப்பிள்ளை மணியகாரன் வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

தகவல்:
பிள்ளைகளான
சிறிபாஸ்கரன் (சிறி)
சிறிதரன் (றஞ்சன்)
சிறிகரன் (கரன்)

(C853573) N-1

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 – 10 – 1936



மறைவு
10 – 01 – 2022

அமரர்
### வினாசித்தம்பி ஆனந்தக்கிருஷ்ணன்
(Retired Officer, State Film Coperation, Ceylon)

பாசத்தின் உறைவிடமே, பண்பின் ஒளிவிளக்கே
பண்ணிய புண்ணியத்தால் பரமனடி நாடி
விண்ணுலகை நண்ணி விரைந்தீரோ!
ஆண்டுகள் நகர்ந்தாலும் நினைவுகள் நகர்வதில்லை
இரண்டாம் ஆண்டின் நிறைவு நாளில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய் வடக்கு,

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம்
28.10.1950

மறைவு
16.01.2024

### பரராஜசேகரம் சிவநாதன்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசேகரம் சிவநாதன் கடந்த (16.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசேகரம் சித்திரா தேவி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் நல்லம்மா தம்பதியரின் மருமகனும், உதய மலரின் அன்புக் கணவரும், சிவகுணாளன் (UK), சிவபரதன் (UK), இந்துஷா (கனடா), பத்மசிவம் (University Jaffna), டிலுக்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிலாணி, தர்சி, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அல்வின், தஸ்வின், ஜென்சி, அஷ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜீவசோதி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் (பாபு) மற்றும் சாந்தி, ஜெயந்தி, இராஜேந்தி, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்
077 932 3210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# இறுகப்பற்றுதல்

உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில், தமிழ்நாட்டு அரசின் ஏற்பாட்டில் 'அயலகத் தமிழர்கள் விழா' முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஜனவரி 11, 12ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்த விழாவில் கனடா, பிரான்ஸ், பிரிட்டன், இலங்கை, மலேசியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் என வெவ்வேறு நாடுகளில் வசிக்கும் பலநூறு தமிழர்களும் தமிழ்த் தலைவர்களும் கலந்துகொண்டனர். உண்மையில் காலத்தின் தேவைகருதிய இந்த முயற்சி அதற்குரிய கனதியைப் பெற்றதா? அதிர்வலைகளை இலங்கையில் ஏற்படுத்தியா? என்று கேட்டால் அதற்கு 'இல்லை' என்பதே பதில். இலங்கையிலிருந்தும் சில தலைவர்கள், அரசியல்வாதிகள் கலந்துகொண்டாலும் மக்கள் மத்தியில் இந்த விழா பேசுபொருளாகவில்லை. அதுவே யதார்த்தம்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது பல்வேறுபட்ட அரசியல் விமர்சனங்கள் இருந்தாலும், தமிழகத்தில் ஆட்சியமைத்த காலம்முதல் இன்றுவரை அவருடைய பல நகர்வுகள் மிகக் காத்திரமானவையாகவும், தமிழர்களை ஓரணியில் ஒருங்கிணைக்கும் சக்தியாகவும் அமைந்திருக்கின்றன என்றால் அதில் மாற்றுக் கருத்தில்லை. 2009ஆம் ஆண்டின் பின்னர் அதாவது விடுதலைப் புலிகள் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழக - ஈழ அரசியல் உறவென்பது அவ்வளவு ஆழம் மிக்கதாகவும் நேர்த்தியாகவும் இருக்கவில்லை. அந்த உறவானது வெறும் அறிக்கைகளை மையப்படுத்தியதாக, காகிதரீதியிலானதாகவே இருந்து வந்திருக்கின்றது. இந்த சபிக்கப்பட்ட போக்குக்கு, ஒரு காத்திரமான முற்றுப்புள்ளி வைத்து - ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் இடையிலான நீண்டதும் நெடியதுமான உறவில் - ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் ஸ்டாலினின் அரசியல்போக்கு நகர்ந்து செல்வது தனித்துத் தெரிகின்றது.

ஆட்சியேறிய பின்னர் ஸ்டாலின் தனது புதிய அமைச்சரவையில், இதுவரைகாலமும் இருந்துவந்த 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் நலன்' என்ற துறையை மாற்றி 'வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்' என புதிய துறையை உருவாக்கியிருந்தார். இந்த மாற்றம் ஈழத்தமிழர் நலனை மையப்படுத்தியதுதான் என்பதில் சந்தேகக்கண் தேவையில்லை. அத்துடன் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர் அகதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவர்களுக்கான இதர நலத்திட்டங்கள் என்பனவும் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஸ்டாலின் எவ்வளவு அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் இருக்கின்றார் என்பதைத்தான் மெய்ப்பிதம் செய்தன - செய்கின்றன. தி.மு.க.வின் ஈழத்தமிழர் உறவு வரலாற்றில் 2009ஆம் ஆண்டுப் பக்கங்களை நீக்கிவிட்டு ஆராய்வோமாயின், இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, 1989ஆம் ஆண்டு நவம்பரில் ஆட்சிக்கு வந்த கருணாநிதியின் ஆட்சி, 1991ஆம் ஆண்டு ஜனவரியில் கலைக்கப்பட்டதன் பின்னணியில் தி.மு.க.வின் ஈழப் போராட்ட ஆதரவே காணப்படுகிறது. ஆதலால் தி.மு.க. மீது அவ்வளவு கசப்புணர்வையோ பகைமையையோ வளர்த்துக்கொள்ளவேண்டிய தேவை இங்கில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அங்கிருப்பது தமிழக அரசு. தி.மு.க., அ.தி.மு.க. என்ற பேச்சையே நாம் 'இராஜதந்திர' ரீதியாகத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இப்படியானதொரு புரிதலின் அடிப்படையில், 'அயலகத் தமிழர்களுக்கான' இந்த விழாவைத் தமிழர் தாயகத்தில் இன்னும் பேசுபொருளாக்கி அதை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்லவேண்டிய தேவையும் பொறுப்புணர்வும் தமிழ்த் தலைவர்களுக்கு இருக்கவே செய்கின்றது. இவ்வாறானதொரு விழா இடம்பெற்றதுகூடத் தெரியாமல், இலட்சம் ஈழத்தமிழர்கள் இருக்கின்றனர். தமிழகத்துடனான தொன்றுதொட்ட உறவை மேலும் பலப்படுத்த வரலாறு வழங்கியுள்ள வாய்ப்பையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில் இந்தப் பற்றுதல்தான் தமிழ்த் தேசியத்தின் பிடிமானம்.




# தேர்தல் பரப்புரைகளை ஆரம்பிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 18

**ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளை ஐக்கிய தேசியக் கட்சி நாளை ஆரம்பிக்கவுள்ளது. இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதிக்குள் நடத்தப்படவேண்டும். ஏனைய தேர்தல்களைப்போல ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது. இதன்படி, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள பின்புலத்தில், அனைத்துக் கட்சிகளும் தமது பரப்புரை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் பரப்புரையை கொழும்பில் நாளை ஆரம்பிக்கவுள்ளது. கடந்த வாரம் இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் ஐ.தே.க.வின் வேட்பாளராக ஜனாதிபதி ரணிலை நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மூன்றாம் தவணை தாமதம்

கொழும்பு, ஜன. 18

பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான (2023ஆம் கல்வியாண்டு) இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் தாமதமாக ஆரம்பிக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர விவசாய விஞ்ஞானப்பரீட்சையைஎதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

# அரச தாதியர்களும் பணிப்புறக்கணிப்பு

நாடளாவிய ரீதியில் அரச தாதியர் சங்கமும் நேற்றுப் புதன்கிழமை முதல் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிவரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.


ஊதிய உயர்வையும் விசேட கொடுப்பனவுகளையும் வலியுறுத்தி சுகாதாரத் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பின்புலத்தில் அரச தாதியர் சங்கமும் கொடுப்பனவு உயர்வை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஒரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது. (ச)

# கடற்பரப்புகளில் சீரான வானிலை

கொழும்பு, ஜன. 18

நாடளாவிய ரீதியில் உள்ள கடற்பரப்புகளில் சீரான வானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 தொடக்கம் 30 கிலோமீற்றர் வேகத்தில் வடகிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும் என்றும், நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# சிறந்த வேட்பாளர்கள் பெரமுன வசமுண்டு

## திஸ்ஸ குட்டியாராச்சி புகழாரம்

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய பொருத்தமான வேட்பாளர்கள் எம்வசம் உள்ளனர். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர்கள் பெயரிடப்படுவார்கள் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

பெரமுனக் கட்சி தனித்தா அல்லது கூட்டணி அமைத்தா தேர்தலில் போட்டியிடும் என்பதை இன்னமும் நிச்சயிக்கவில்லை. ஆனால் பொருத்தமான வேட்பாளர்கள் எம்வசம் உள்ளனர். பெரமுன இப்போதும் பலமாகவே உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)

## நாளை

19.01.2024
வெள்ளிக்கிழமை
தை 05

சுபநேரம் : 06.35 - 08.05
இராகுகாலம் : 11.05 - 12.35

## நாளொரு நல்வார்த்தை

வாழ்வாதாரம் விரிவடைய வேண்டும்,
ஆயுள் அதிகம் வேண்டும் என்று
விரும்புகின்றவர்கள் உறவுகளுடன்
சேர்ந்து வாழட்டும்

- நபிகள் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எட்கா' உடன்பாட்டை கைச்சாத்திட ஏற்பாடு



## பதறுகின்றார் வீரவன்ஸ

**கொழும்பு, ஜன.18**

**எட்கா உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இலங்கை - இந்தியாவின் மாநிலம்போல் ஆகிவிடும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எட்கா உடன்படிக்கை கொண்டுவரப்படக்கூடாது என பல போராட்டங்கள் இடம்பெற்று, அந்த முயற்சி அன்று தோற்கடிக்கப்பட்டது. தற்போது எட்காவை கைச்சாத்திடுவதற்கு முயற்சி இடம்பெறுகின்றது. குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இலங்கையில் சேவை சந்தைக்குள்ளும் இந்தியர்கள் வந்துவிடுவார்கள். இந்திய மருத்துவர்கள் மட்டுமல்ல விவசாயிகளும் வரமுடியும்.

இது இரு நாடுகளுக்குமானது எனக் கூறப்பட்டாலும் ஒரு கதவுதான் திறக்கப்படும் என்பதே உண்மை.

இந்தியாவுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் தேவையான அனைத்து விடயங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைவேற்றிவருகின்றார். இவை தொடர்பில் அரசியல் களத்தில் பேசப்படுவதில்லை.

இலங்கை மின்சாரசபையை 8 ஆக உடைத்து விற்பனை செய்யும் திட்டம் 2003 இல் கொண்டுவரப்பட்டது. தற்போது அந்த முயற்சி மீண்டும் இடம்பெறுகின்றது. சமூகத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதன்மூலம் மிகவும் சூட்சுமமான முறையில் நகர்வுகள் இடம்பெறுகின்றன. சிறு சம்பவங்களை உருவாக்குவதன்மூலம் பிரதான சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. இவை தொடர்பில் மேற்குலகத் தூதுவர்கள் கதைப்பதில்லை. ஏனெனில் தமக்குத் தேவையானவற்றை ரணில் நிறைவேற்றுவார் என்பது அவர்களுக்குத் தெரியும். கோத்தபய ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இப்படியான சட்டமூலங்கள் முன்வைக்கப்பட்டிருந்தால் அமெரிக்கத் தூதுவர் நாளொன்றுக்கு நான்கு ருவிற்றர் பதிவுகளையாவது தரவேற்றியிருப்பார்.

ரணிலை ஜனாதிபதிப் பதவியில் நீடிப்பதை அவரைவிட இந்தியாவும், அமெரிக்காவுமே அதிகம் விரும்புகின்றன - என்றார். (எ-44)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 18

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் அறநெறிப்பாடசாலை தொடர்பான கலந்துரையாடல் மாலை 3 மணிக்கு அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ரணிலுக்கு மீளச்சந்தர்ப்பம்!

## கோருகின்றது பெரமுன

கொழும்பு, ஜன.18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி நாட்டை ஸ்திரப்படுத்த மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்று சிறிலங்கா பொதுனபெரமுனக் கட்சிஉறுப்பினரும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க வலியுறுத்துகின்றார்.

மினுவாங்கொட மற்றும் கம்பஹா உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- மொட்டுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை இன்னும் தெரிவு செய்யவில்லை. வேட்பாளரை களமிறக்குவதா, இல்லையா என்பது குறித்து கட்சி இன்னும் ஆலோசித்து வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப்படவேண்டும் என நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நாட்டை ஆள்வதற்கான மிக உயர்ந்த தகுதிகளை அவர் பெற்றுள்ளார். நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்க ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க விரும்புகின்றோம். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டால், கூட்டணியில் உள்ள கட்சியாக அவருக்கு ஆதரவளிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறேன். தற்போதைய ஜனாதிபதி ஜனாதிபதித் தேர்தலில் "தேசிய வேட்பாளராக" போட்டியிடவேண்டும் - என்றார். (எ-44)

# ஆண் குரங்குகளுக்கு இனிமேல் கருத்தடை

கொழும்பு, ஜன. 18

ஆண் குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் குறிப்பாக மாத்தறை மாவட்டத்தில் குரங்குகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், கருத்தடைத் திட்டத்தை வெகு விரைவில் அமுல்படுத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை பெண் குரங்குகளுக்கே கருத்தடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்போதே ஆண் குரங்குகளுக்கு முதன்முதலாக கருத்தடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ம)

# சிறையிலுள்ள புலிகள்பற்றி கேட்டறிந்த சுவிஸ் தூதுவர்

கொழும்பு, ஜன. 18

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் சிறி வால்ட், சிறையிலுள்ள புலிகள் தொடர்பில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவிடம் கேட்டறிந்து கொண்டார்.

அண்மையில் விஜயதாஸ ராஜபக்சவுடன் நடத்திய இரு தரப்புச் சந்திப்பின்போதே இந்த விடயம் தொடர்பில் அவர் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-6)

# ரெலிக்கொமை வாங்குவதற்கு முகேஷ் அம்பானி ஆர்வம்?

கொழும்பு, ஜன. 18

இலங்கை அரசாங்கம் ரெலிக்கொம் நிறுவனத்தை விற்பனைசெய்ய முன்வந்துள்ள நிலையில், இந்தியாவின் பிரபல கோடீஸ்வரரும் முதலீட்டாளருமான முகேஷ் அம்பானி அந்த நிறுவனத்தை வாங்குவதற்கு ஆர்வம் காட்டியுள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அம்பானியின் நிறுவனம் இந்தியத் தொலைத்தொடர்புத் துறையில் முன்னணியில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-6)

# தேயிலை உரம் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 18

தேயிலைச் செய்கைக்கான உரங்களின் விலையை 2 ஆயிரம் ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். சந்தையில் தேயிலை உரத்தின் விலை குறைவடையவுள்ளதாலும், தேயிலைத் தொழில்துறையின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# பௌத்தத்தைப் பாதுகாக்க தனிச்சட்டம் அவசியம்!

## கம்மன்பில வலியுறுத்து

கொழும்பு, ஜன. 18

பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்காக தனிச்சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவருடைய கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பௌத்த மதத்தை அவமதிக்கும் செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக வெளிநாடுகளில் இருந்து கோடிக்கணக்கான பணம் பெறப்படுகின்றது. சிலர் தங்களை பௌத்தர்கள் போல் காட்டிக்கொண்டு பௌத்தத்தை அவமதிக்கிறார்கள். இதற்கிடையில், மதம் சாராத குருமார்கள்கூட பௌத்த மதத்தை பயமின்றி அவமதிக்கிறார்கள்.

பௌத்தத்தை அவமதிக்கும் மதச்சார்பின்மைவாதிகளும் வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுகின்றனர். எனவே, பௌத்தத்தை அவமதிக்கும் இந்தச் செயற்பாடு மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடு என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது - என்றார். (ம)

# பழிக்குப்பழிவாங்கும் படலம்; மட்டக்குளி துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜன.18

கொழும்பு, மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்திய உயன தொடர்மாடிக் குடியிருப்புக்கு அருகில் நபரொருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் பாதாளக் குழு மோதல் தொடர்புபட்டுள்ளது எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8.30 மணியளவிலேயே துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆட்டோவில் இருந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 40 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். 'படா ரஞ்சி' என அழைக்கப்படும் செல்வம் ஆறுமுகன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தலைமறைவாகியுள்ள பாதாளக் குழு [illegible] பூகுடு கண்ணாவின் உதவியாளராக இவர் செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது. தைப்பொங்கலைக் கொண்டாட வந்திருந்த நிலையிலேயே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார். நிழல் உலக தாதா கஞ்சிபானி இம்ரானின் தந்தை சில வருடங்களுக்கு முன்னர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அந்தச் சம்பவத்துக்கு பழிதீர்க்கும் வகையில் கஞ்சிபானி இம்ரானின் சகாக்களால் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்கைதிகள் 14 பேரே சிறையில்

## நீதி அமைச்சர் கூறுகின்றார்

வவுனியா, ஜன.18

அரசியல் கைதிகள் 14 பேரே சிறைகளில் உள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு நடக்கின்றது. அரசியல்கைதிகள் ஐவர் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச. வவுனியாவுக்கு நேற்றுச் சென்றிருந்த நீதியமைச்சர் வைரவப்புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அரசியல்கைதிகள் ஐவர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் 14 பேர் மட்டுமே உள்ளனர். அவர்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெறுகின்றன.

போதைப்பொருள் மாபியாக்களைக் கட்டுப்படுத்த தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. யுக்திய நடவடிக்கையில் கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றதுஎன்றும்அவர் தெரிவித்தார். (அ-எ-18)



தையிட்டி திரு வள்ளுவர் சனசமூக நிலைய அனுசரணையுடன் திருவள்ளுவர் மாதர் கழகம்நடத்திய தைப்பொங்கல்விழா தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி சு.சிவகெங்கா முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டார். (எ-9)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திருமதி கிருசாந்தி நிர்மலகாந்தன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சண்முகலிங்கம் இராசம்மா


அவர்கள் கடந்த 16-01-2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம்
அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிச் சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### வீரகத்தி கோபாலகிருஸ்ணன்

**(ஓய்வுபெற்ற கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)**



**பிறப்பு 21.03.1950** **இறப்பு 17.01.2024**

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி கோபாலகிருஸ்ணன் நேற்று (17.01.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி - ஞானகலாவல்லி ஆகியோரின் அன்பு பெறாமகனும். காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற சித்திரகௌரியின் அன்புக் கணவரும். நிஷாந்தன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்). தர்சிகா (லண்டன்). சுகந்தன் (ஆசிரியர். யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும். பவித்திரா (பொறியியலாளர் - சிங்கப்பூர்). மனோகரன் (லண்டன்). திவ்வியாவந்தி (ஆசிரியை. யா/புங்குடுதீவு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். ஆயூஷன். நட்சத்திரா. தாரணா ஆகியோரின் பாசமிகு பேரனும். இராசம்மா. குஞ்சுத்தம்பி. கைலாசபதி. கணேசமூர்த்தி. தங்கராணி. கலாவதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 27615)A-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21 . 03 . 1950



மறைவு 17 . 01 . 2024

### வீரகத்தி கோபாலகிருஷ்ணன்

எமது நண்பன் **கோபாலகிருஷ்ணன் நிசாந்தனின்**
அன்புத் தந்தை நேற்று (17.01.2024) புதன்கிழமை
அன்று சிவகதி அடைந்ததை அறிந்து துயர் அடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டுவதோடு, எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம். மேலும் அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

(CS 27690) A-1

**மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட**
**பிரிவு 2004/2005 தமிழ் மாணவர்கள்.**

## 2024 / 2025 கல்வி ஆண்டுக்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

## புடவைக் கைத்தொழில் திணைக்களம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் 2024 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதற்கு ஏற்பாடாகியுள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பயிற்சி கற்கைகளுக்காக தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இந்தக் கற்கைகள் கட்டண அறவீடு இன்றி முழுமையாக இலவசமாக நடத்தப்படும்.

01. நடத்தப்படும் கற்கையின் பெயர் மற்றும் காலம்
    I. கைத்தறி புடவைக் கைத்தொழில் அடிப்படை பயிற்சி கற்கை - 06 மாதம்
    (06 மாதங்கள் முழு நேர கற்கை ஒன்றாக இருப்பதோடு, கைத்தறி புடவைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான அடிப்படை அறிவை பெற்றுக்கொடுப்பது இந்தக் கற்கை மூலம் மேற்கொள்ளப்படும்)
    II. கைத்தறி புடவைக் கைத்தொழில் இறுதி சான்றிதழ் கற்கை - 12 மாதங்கள்
    (12 மாதங்கள் முழு நேர கற்கை ஒன்றாக இருப்பதோடு, இறுதியில் நடத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தி பெறுகின்ற மாணவர்களுக்கு புடவைக் கைத்தொழில் இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும்)
02. உள்ளீர்ப்புக்கான தகைமைகள்
    I. அடிப்படை பயிற்சிக் கற்கை
    - 8 ஆம் தரம் வரை கல்வி கற்றிருத்தல்.
    - 16 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
    II. இறுதிச் சான்றிதழ் கற்கை
    - க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
    - 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

** கற்கைகளை கற்பதன் மூலம் கிடைக்கின்ற நன்மைகள்

1. கைத்தறி புடவைக் கைத்தொழில் சுய தொழிலாளர்களாகும் வாய்ப்பு
2. உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்திக்காக உங்களது பங்களிப்பை பெற்றுத்தருதல்
3. புடவைக் கைத்தொழில் ஆலோசகர் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படும் வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் (குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு போட்டிப் பரீட்சை ஒன்றில் மூலம் இணைக்கப்படும்)
4. ஆங்கிலம், கணினி அறிவு மற்றும் ஆளுமை விருத்தி திறன்களை மேம்படுத்தல்

I. கற்கையை மேற்கொள்ளும் காலத்தில் 100.00 ரூபா தினசரிக் கொடுப்பனவு மற்றும் நிறுவனம் சார்ந்த சீருடை வழங்கப்படும்.
II. விடுதியுடனான பயிற்சி நிறுவனங்களுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களுக்கு இலவச தங்குமிட வசதி வழங்கப்படும் (உணவு செலவுகள் தவிர்த்து)

| | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முகவரி | மாவட்டம் | விடுதி வசதி | மொழி ஊடகம் |
|---|---|---|---|---|
| 1 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ | கொழும்பு | உண்டு | சிங்களம் |
| 2 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், ஹக்மன வீதி, மாத்தறை | மாத்தறை | உண்டு | சிங்களம் |
| 3 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கிரம | ஹம்பாந்தோட்டை | உண்டு | சிங்களம் |
| 4 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், அருப்பல வீதி, வட்டபுலுவ, கண்டி | கண்டி | உண்டு | சிங்களம் |
| 5 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கெட்டபே, பேராதனை | கண்டி | உண்டு | சிங்களம் |
| 6 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கினிகம, பண்டாரவளை | பதுளை | உண்டு | சிங்களம் |
| 7 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் கோன்கஹமுல, பலாபத்வல, மாத்தளை | மாத்தளை | உண்டு | சிங்களம் |
| 8 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், போயகனே, குருணாகல் | குருணாகல் | உண்டு | சிங்களம் |
| 9 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கொட்டல, வேயன்கொட | கம்பஹா | உண்டு | சிங்களம் |
| 10 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், மிஹிரிகம, தலாவ, அநுராதபுரம் | அநுராதபுரம் | உண்டு | சிங்களம் |
| 11 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், பின்னவல, ரம்புக்கன | கேகாலை | இல்லை | சிங்களம் |
| 12 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், கிங்தொட்ட, காலி | காலி | இல்லை | சிங்களம் |
| 13 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், சம்மாந்துறை | அம்பாறை | உண்டு | சிங்களம் தமிழ் |
| 14 | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம், 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | உண்டு | தமிழ் |

03. கீழ் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. (சா.தர) மற்றும் க.பொ.த. (உ.தரம் - இருப்பதாயின்) பெறுபேறு சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களின் நிழல் பிரதிகளை இணைத்து 2024.01.30 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**பணிப்பாளர்**
**புடவைக் கைத்தொழில் திணைக்களம்**
**3ஆவது மாடி, செயலாளர் நாயக அலுவலகக் கட்டிடம்**
**மாளிகாவத்தை, கொழும்பு 10. தொ.பே. : 011-2322895**
**மின்னஞ்சல் : dtidev2000@gmail.com**

### மாதிரி விண்ணப்பப்படிவம்

### 2024/ 2025 கல்வி ஆண்டுக்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு

1. முழுப் பெயர்:
2. தனிப்பட்ட முகவரி:
3. தொலைபேசி இலக்கம்:
4. வதிவிட மாவட்டம்:
5. பிறந்த திகதி:
6. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
7. ஆண்/ பெண் தன்மை:
8. திருமணமானவர்/ திருமணமாகாதவர்:
9. கல்வித் தகைமை:
10. இணைவதற்கு எதிர்பார்க்கும் நிறுவனம்:
11. கற்பதற்கு எதிர்பார்க்கும் கற்கை:

| | |
|---|---|
| அடிப்படை | |
| இறுதிச் சான்றிதழ் | |

12. விடுதி வசதி: தேவை/ தேவை இல்லை

மேல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது என உறுதி செய்கிறேன்

திகதி

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

## கலைமாணிப் பட்டப்படிப்பு (வெளிவாரி) புதிய அனுமதி - 2020/2021

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் 2020 அல்லது அதற்கு முன்னர் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன், பொதுஅறிவுப் பரீட்சையில் 30% க்கு குறையாத புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள அல்லது NVQ Level-04, டிப்ளோமாக்கள், மொழி டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தொடர்புடைய மற்றும் சமமானது என கருதப்படவல்ல தகைமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை மூலமாகவோ அல்லது அவ்விரண்டினதும் மூலமாகவோ தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 20.02.2024**

**விண்ணப்பம் செய்யும் முறை**

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) பதிவினை மேற்கொள்ள முடியும். எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் 890032340002142 எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்பக் கட்டணமாக 1000.00 ரூபாவினை செலுத்தி அதன் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை இணையத்தள முகவரியில் பதிவேற்றம்செய்வதோடு விண்ணப்பத்தின் மூலப்பிரதியை நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பித்தல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கலைமாணிப் பட்டப்படிப்பு- 2020/2021" எனக்குறிப்பிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவேண்டும்:

**உதவிப்பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

**பின்வரும் காரணங்களுக்காக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்:**

- அனுமதிக்கான தகைமைகளினை விண்ணப்பதாரி கொண்டிருக்கத் தவறுதல் / தகைமைகளினை முறையாக படிவத்தில் பூரணப்படுத்தத் தவறுதல்.
- விண்ணப்பப்படிவத்தினை மேற்கண்ட இணையத்தளத்தில் முறையாக தரவேற்றம் செய்யத் தவறுதல் / விண்ணப்பப்படிவத்தின் மூலப்பிரதியினை நேரடியாக/ தபால் மூலம் சமர்ப்பிக்காது தவறுதல்.
- விண்ணப்பக் கட்டணமான 1000.00 ரூபாவினை செலுத்தத் தவறுதல் அல்லது அதன் மூலப்பிரதியினை இணைக்காது சமர்ப்பித்தல் / அதனைத் தரவேற்றம் செய்யத் தவறுதல்.
- விண்ணப்ப முடிவுத்திகதியான 20.02.2024க்கு பின்னர் சமர்ப்பித்தல்.

மேலதிக விவரங்களுக்கு www.codl.jfn.ac.lk அல்லது 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# நாய்களுக்கு இன்று தடுப்பூசி

நாய்களுக்கான விசர் தடுப்பு மருந்தேற்றல் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மல்லாகம் பொதுச் சுகாதாரப்பிரிவில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. மல்லாகம் தெற்கு கல்லாரை சனசமூக நிலையத்தில் முதல்நாள் தடுப்பு மருந்தேற்றல் இடம்பெறும். கடந்த வருடம் யாழ்.மாவட்டத்திலேயே அதிக விலங்கு விசர்நோய் இறப்புக்கள் ஏற்பட்டுள்ளமையால் தவறாது அனைத்து வளர்ப்பு மற்றும் தெருவோர நாய்களுக்கும் தடுப்பு மருந்தேற்றுவது அவசியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)



சிவ சக்தி

**அருள்மிகு ஆதிபராசக்தி உடனுறை ஆதிசிவன் திருக்கோயில் தொல்புரம்**

(பூதராசி அம்மன்கோயில் பின்புறம்)

அன்புடை சிவனடியார்களே!

- நாளை (19.01.2024) வெள்ளிக்கிழமை
- காலை 9.00 மணிமுதல் 11.00 மணிவரை

**விசேட பூசைகள்** நடைபெறும்.

அனைவரும் வருக

தொடர்பு:
சிவஸ்ரீ குகன் குருக்கள்- 077 614 0849, 074 369 2974

## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2024

- காலம் : 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி
- இடம் : கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
- தலைமை : திரு.செ.ஜெயக்குமார் (சங்கத் தலைவர்)

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் **18.02.2024** அன்று நடத்த தீர்மானித்திருப்பதால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை **08.02.2024** புதன்கிழமைக்கு முன்னதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பிவைக்கவும். அத்துடன் அங்கத்தவர் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்றிருப்பின் அவற்றின் விவரங்களினை சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**செயலாளர்,**
**க.செல்வச்சந்திரன்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 11.07.1936

இறைவன் அடியில் 29.01.2023

**அமரர் சின்னத்தம்பி இலகுநாதர்**

திதி: அட்டமி (வளர்பிறை)

**கண்முன்னே வாழ்ந்த காலம்**
**கனவாகிப் போனாலும்**
**எம்முன்னே உங்கள் முகம்**
**எந்நாளும் உயிர்வாழும்**

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அஸ்வினி இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# முதலாம் ஆண்டு நினைவு அழைப்பு

மண்ணில் 18 . 08 . 1985

விண்ணில் 29 . 01 . 2023



**அமரர் சண்முகலிங்கம் பிரதாப்**

(வதனி ஜுவலறி, கொடிகாமம்)

எமது குடும்ப குலவிளக்கு
அமரர் சண்முகலிங்கம் பிரதாப் அவர்களின்
முதலாம் ஆண்டு கிரியை நிகழ்வு
எமது இல்லத்தில்
நாளை (19.01.2024) வெள்ளிக்கிழமை
நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும், மதிய
போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன்
கேட்டுக்கொள்கின்றோம்

முக்கிய குறிப்பு: இவ் அழைப்பை தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடனும்,
தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

பொற்தொழிலாளர் வீதி,
மீசாலை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 800 2724

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




### யாழ். பல்கலைக்கழகத்தின்

# இளங்கலை மாணவர்கள் ஆய்வு மாநாடு இன்று!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டின் தொடக்க நிகழ்வுகளில் ஒன்றாகவும், பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஓர் அம்சமாகவும் இந்த இளங்கலை மாணவர் ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இந்த மாநாட்டில் கலைப்பீடத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மனிதாய்வுக் கற்கைகள் சார்ந்த 136 ஆய்வுக்கட்டுரைகள் பட்டப்படிப்பை நிறைவுசெய்து வெளியேறும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

'இலங்கையில் தொடரும் நெருக்கீடுகளிடையே தப்பிப்பிழைத்தலும் எதிர்ப்பும்' என்னும் கருப்பொருளில் நடைபெறும் இந்த ஆய்வு மாநாடு, மாணவர்கள் தமது இறுதிவருட ஆய்வுச் செயற்பாட்டின் பேறான ஆய்வேடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த ஆய்வுக்கட்டுரைகளை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக அமைந்துள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் மாநாட்டின் அழைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே.எல்.ரமணன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். மாநாட்டின் தலைமையாளராக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், மற்றும் சிறப்புரையாளராக இலங்கை நிர்வாகசேவையின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி இரேனியஸ் செல்வின் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆய்வுக்கட்டுரை அமர்வுகள் இரண்டு தொகுதிகளாக 17 விடயதானங்களின் ஊடாக மு.ப. 11 மணிக்கும் மதியம் 1 மணிக்கும் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரை மண்டபங்களில் ஆரம்பமாகும். (ம-125)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள். கூடுதலாக லாபம் கிடைக்கும். சிரமங்கள் அறவே நீங்கும்.

**இடபம்:** உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வார்த்தை வெற்றியடையும். நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்று கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு அனுப்புவதாக பல லட்சம் ரூபா மோசடி!

## அழகுக்கலை நிபுணர் கைது

யாழ்ப்பாணம், ஜன.18

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பல இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணரான இந்தப் பெண், யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகளை நடத்தி அதன்மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து பண மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரை பிரான்ஸுக்கு அனுப்புவதாகக் கூறி சுமார் 42 இலட்சம் ரூபாவை இவர் மோசடி செய்துள்ளார். இது தொடர்பாக யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசேட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபரைக் கைது செய்துள்ளது.

சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையில், சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் பலகோடி ரூபா வைப்பில் உள்ளது என்று கூறப்படுகின்றது.

(அ-எ-26)

## வேலைவாய்ப்பு

பிரபல நிதி நிறுவனத்தில் ஆண்களுக்கான நிரந்தர வேலைவாய்ப்பு.
தகைமை :- G.C.E. O/L Pass, G.C.E A/L Pass
கொடுப்பனவுகள்:- அடிப்படைச் சம்பளம் with EPF + ETF
பயணக் கொடுப்பனவுகள்,
தொலைபேசி செலவுகள்,
தரகு கொடுப்பனவுகள்.
சுயவிவரக் கோவையை பின்வரும் E-mail, Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
Chunnakamz@outlook.com / 0750 414 026
(CS 27657) A-1

## சதோசவில் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 18

சதொச நிறுவனத்தில் சில பொருள்களின் விலைகள் குறைக்கப்பட வுள்ளன. சவர்க்காரம், வாசனைத் திரவியங்கள், முகப்பூச்சு மற்றும் குழந்தைகளுக்கு தேவையான பொருள்கள் என்பவற்றின் விலைகளே குறைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ச-இ)

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### மாநகர சபை எல்லைக்குள் வாழும் பொதுமக்களுக்கான விசேட அறிவித்தல்

❋ மாநகரசபைக்கு உட்பட்ட அனைத்து வரியிறுப்பாளர்களும் தங்களது திண்மக்கழிவுகளை தரம் பிரித்தே கையளித்தல் வேண்டும்.

❋ மாநகரசபை கட்டளைச்சட்டங்கள், சுற்று நிருபங்களின் கீழ் சமையலறைக் கழிவுகள் மாத்திரமே மாநகரசபையால் இலவசமாக அகற்றப்படும். ஏனைய தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் அவற்றின் அளவுகளின் அடிப்படையில் கட்டணத்துடனேயே அகற்றப்படும்.

❋ தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை பொதுமக்கள் காக்கைதீவு மீள்சுழற்சி மையம், கல்லுண்டாய் திண்மக் கழிவு சேகரிப்பு நிலையம் மற்றும் 09 பிரட்டு மையங்களிலும் (நல்லூர், அரியாலை, பாஷையூர், குருநகர் I, குருநகர் II, பசார், நாவாந்துறை, வண்ணார்பண்ணை, கொழும்புத்துறை) கையளிக்க முடியும்.

❋ தரம் பிரித்து வழங்கப்படாத கழிவுகள் எக்காரணங்கள் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

❋ நீரோடும் வெள்ளவாய்க்கால்களில் கழிவுப்பொருட்கள் மற்றும் குப்பைகளைப் போடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.

❋ கழிவுகளை வீதிகளிலும், பொதுஇடங்களிலும், வெற்றுக்காணிகளிலும் முறையற்ற விதத்தில் வீசுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன், வீசுவோர் மீது தண்ட அறவீடும் எமது உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுச்சூழல் பொலிஸார் ஊடாக சட்ட நடவடிக்கையும் மாநகரசபையால் எடுக்கப்படும்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(CR 41572) S-1

## பணிப்பெண் தேவை

யாழ் நகருக்குள் இருக்கும்
சிறிய குடும்பத்திற்கு
பணிப்பெண் தேவை.
தொடர்பு: 076 287 6860

## காணி விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில்,
4 பரப்புக் காணியும், 5 பரப்புக் காணியும்,
6 பரப்புக் காணியும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 232 535

## மரண அறிவித்தல்



### பத்மலோஜினி சண்முகநாதன்

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலோஜினி சண்முகநாதன் அவர்கள் நேற்று (17.01.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரசாமி சண்முகநாதன் (ஓய்வுநிலை மேல்நீதிமன்ற பதிவாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி வல்லிபுரம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசாமி கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்புச் சகோதரியும், செல்வலட்சுமி (UK) மற்றும் தங்கரத்தினம், பாலசுந்தரம் (Canada), காலஞ்சென்றவர்களான குலசிங்கம், சிவஇன்பநாயகி மற்றும் சிவசுப்பிரமணியம் (Canada) ஆகியோரின் மைத்துனியும், தர்ஷிகா (தொழிற்துறை திணைக்களம், யாழ்ப்பாணம்), கௌசிகன் (மாவட்ட நீதிமன்றம், கொழும்பு), துளஷிகன் (மாவட்ட / நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை), நிரோசிகன் (பேரவைச் செயலகம், வட மாகாணசபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி), நிருஜா (தொழில் நியாயசபை, யாழ்ப்பாணம்), சியாமளா (தொழிற்துறை திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிஷயன், ஷயானி, பிரகீத், பிரணிகா, யாதிரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2024) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தொடர்பு:021 221 4393

தகவல்:
குடும்பத்தினர்.
(CR 41578) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1974



மறைவு 17 . 01 . 2024

### திருமதி இராமகிருஸ்ணன் சுஜிதா

பதிவாளர் வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமகிருஸ்ணன் சுஜிதா நேற்று (17.01.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் சித்திராதேவி தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், இராமகிருஸ்ணனின் அன்பு மனைவியும், இராதாகிருஸ்ணன், ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்ற சுபத்திராதேவி மற்றும் கமலாதேவி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2024) வியாழக்கிழமை பதிவாளர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர் - க.இராமகிருஸ்ணன்
077 2966 926
(CS 27695) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது. முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றிலில் கனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும், அதைத் தொடர்ந்து விசேட கூட்டமும் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், அரசாங்கமும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றது என்று குற்றஞ்சாட்டியே இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் இன்று முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-எ-66)

# கடலட்டைபிடித்த 12 பேர் சிக்கினர்!

மன்னார், ஜன.18

மன்னார், ஓலைத்தொடுவாய் கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் மீனவர்கள் 12 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 4 படகுகள், நீரில் மூழ்கும் கருவிகள், சுமார் 968 கடலட்டைகள், 34 சங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் 22 வயதுக்கும் 48 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றது. (அ-எ-56)

## கோத்தாபயவின்...

2011 ஆம் ஆண்டு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். கொழும்பின் புறநகர் பிரதேசமான கொலன்னாவ பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடந்திருந்தது. இந்தச் சம்பவத்தில் பாரத லக் ஷ்மன் பிரேமச்சந்திரவும், அவரது மெய்ப்பாதுகாவலரும் அடங்கலாக மூவர் கொல்லப்பட்டனர். 10க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் துமிந்த சில்வாவும் படுகாயமடைந்தார். துமிந்த சில்வா தரப்புக்கும், பாரத லக் ஷ்மன் தரப்புக்கும் இடையிலான மோதல் காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவந்த நிலையில், 2016 ஆம் ஆண்டு துமிந்த சில்வா உட்பட ஐவருக்கு 2016 ஆம் ஆண்டு நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்தது.

துமிந்த சில்வா சிறைத்தண்டனை அனுபவித்து வந்தநிலையில் 2021 ஆம் ஆண்டு ஜனாதிபதி பதவிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ச துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி பாரத லக் ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி சுமனா பிரேமச்சந்திர, மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான சட்டத்தரணி கஸாலி ஹூசைன் ஆகியோர் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

மனுக்களை விசாரித்த பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் அமர்வு, கோத்தாபய ராஜபக்ச வழங்கிய பொதுமன்னிப்பு சட்டத்துக்குப் புறம்பானது என்று தீர்ப்பளித்துள்ளது. பிரதிவாதிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தீர்ப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஹிருணிகா பிரேமச்சந்திர, "என் தந்தை விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்தது. கோத்தாவின் முட்டாள்தனமான தீர்மானத்தை நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. பொதுமன்னிப்பு அதிகாரத்தை எதிர்கால ஜனாதிபதிகள் துஷ்பிரயோகப்படுத்தக் கூடாது என்பதற்கு உயர்நீதிமன்ற தீர்ப்பு சிறந்த எடுத்துக்காட்டு" என்று குறிப்பிட்டார். (அ-எ-இ)

## நாளை...

ஏற்பாடு செய்துள்ளன. இந்த வர்த்தக சந்தை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே கே. விக்னேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறந்த தொழில் முயற்சியில் ஈடுபடும் முதலீட்டாளர்களை ஊக்குவித்து, மேம்படுத்தும் வகையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் 350 காட்சிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத் துறை, தொழில்நுட்பப் பகுதிகள், கணினியியல் துறைப் பகுதிகள், உள்ளூர் உற்பத்திக் காட்சிக் கூடங்கள், வெளிநாட்டு கல்வியியற் பிரிவுகள், தனியார் அரச, கல்வியியற் காட்சிக் கூடங்கள், வாகன விற்பனைச் சந்தைகள், சிற்றுண்டி வகைகள், மின்னியல் சாதனங்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சிறுமுயற்சியாளர்களுக்கு 10 இலவச காட்சிக் கூடங்களும், தொழில்முனைவோருக்கு 10 இலவச காட்சிக் கூடங்களும் வழங்கப்படவிருக்கின்றன. சிறிய முதலீட்டைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படுகின்றன. இம்முறை தென்னிலங்கை முதலீட்டாளர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் இங்கு வந்து தங்கள் சந்தைவாய்ப்பை மேற்கொள்ளவுள்ளனர் - என்றார். (அ-எ-27)

## நாட்டு...

தனக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளில், துமிந்த சில்வாவை சிறையில் வைத்திருப்பது அவரது உடல் நலத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வேறு பல காரணங்களை முன்வைத்து அவருக்குப் பொது மன்னிப்பை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை தனக்கு விடுக்கப்பட்டமை நினைவில் உள்ளது என்றும் அவர் அந்த சத்தியக்கடதாசியில் தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பை வழங்கவேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கும் வேறு பல விடயங்களும் ஆவணங்கள் காணப்பட்டன. தனிப்பட்ட அரசியல் தொடர்புகள் காரணமாக பொது மன்னிப்பு வழக்கப்படவில்லை என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு சட்டபூர்வமானதல்ல எனத் தெரிவித்து நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்துள்ள உத்தரவில் இந்த சத்தியக்கடதாசியும் இடம்பெற்றுள்ளது. (அ-எ-இ)

## ஐ.நா. பேரவைத்...

கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவருவதில் முனைப்பாக உள்ள இணைத்தலைமை நாடுகளானபிரிட்டன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை வளைத்துப்போடும் முயற்சியில் ரணில் ஈடுபட்டுள்ளார். பிரிட்டனையும் அமெரிக்காவையும் கைக்குள் போடும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி செங்கடலுக்கு இலங்கை கடற்படைக் கப்பலை அனுப்பி வைத்துள்ளார் என்று டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது உகண்டாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, அணிசேரா நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவருவதில் முனைப்புக் காட்டிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களின் 'மண்டையைக் கழுவும்' வேலையையும் ரணில் மேற்கொள்ளவுள்ளார்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தை ஸ்தாபிப்பதன் ஊடாக சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றும் வேலையையும் ரணில் கனகச்சிதமாக நிறைவேற்றவுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-எ-6)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் திருநெல்வேலி, கொக்குவில் மற்றும் யாழ். நகர்ப் பகுதிகளில் டெங்கின் தாக்கம் தீவிரம் பெற்றுள்ளது.

இதனால் டெங்குப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நிலையங்களிலும் நாளைமுதல் (இன்று) விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. பொதுமக்கள் இந்தத் திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி டெங்கின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு உதவவேண்டும்.

முதற்கட்டமாக கொக்குவில் கிழக்குப் பகுதியில் 20 குழுக்களாக எமது அணியினர் பிரிக்கப்பட்டு டெங்குக் கட்டுப்பாட்டுப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் - என்றார். (அ-ம-26-66)

## மற்றொரு...

வேறு சில வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. மிருசுவில் படுகொலையாளி தொடர்பாக நாமும் பொது மன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம்' என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு வழக்கு நடவடிக்கைக்காக வந்திருந்த எம்.ஏ. சுமந்திரனிடம், ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் இவ்வாறான தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும். கோத்தாபய ராஜபக்ச வழங்கிய பொதுமன்னிப்பு ஒன்றை நாமும் சவாலுக்குட்படுத்தியுள்ளோம். அதன் தீர்ப்பு இன்னமும் வரவில்லை என்றும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (அ-எ-19)

## விபத்தில்...

மன்னார், உயிலங்குளத்தைச் சேர்ந்த யாக்கோபு சூசைதாசன் (வயத-67) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி சைக்கிளில் இவர் பயணித்தபோது, பின்புறம் வந்த மோட்டார் சைக்கிள் இவரை மோதியதில் படுகாயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## ரணிலை...

ஜோர்ஜீவா பாராட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ள அவர், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

சுவிற்ஸர்லாந்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது, இந்தப் பாராட்டை தெரிவித்தேன் என்று ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார்.

ருவிற்றர் சமூக வலைத்தளப் பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்ரோபர் மாதத்துக்குமுன் வழமையான "லைசென்ஸ்"

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் தற்போதைய நடைமுறை நிறுத்தப்பட்டு, எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஒருநாள் சேவையின் ஊடாக வழமைபோன்று சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் 25 மாவட்ட அலுவலகங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் வெரஹெர தலைமை அலுவலகத்தின் தரத்துக்கு மேம்படுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

'விபத்துகளின்போது செயற்படுத்த வேண்டிய முதலுதவிகள் தொடர்பில் சாரதிகளுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் சாரதி அனுமதிப் பரீட்சையின்போது முதலுதவி தொடர்பான வினாக்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

போதைப்பொருள் பாவனையுடன் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது. மேல் மற்றும் தென் மாகாணங்களில் முதற்கட்டமாக செயற்படுத்தப்படும் இந்தத் திட்டம் இந்த ஆண்டுக்குள் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும்' என்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

(அ-எ-26)

**வீட்டுத்தோட்ட பராமரிப்புக்கு ஆள் தேவை**

கோப்பாயிலுள்ள வீடொன்றின் வீட்டுத் தோட்ட பராமரிப்புக்கு ஆள் தேவை.
பகுதி நேரமாகவோ, முழு நேரமாகவோ பணியாற்றக்கூடிய தேக ஆரோக்கியம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளலாம்.
தொடர்பு:- 077 120 9998

**பட வரைஞர் (Draughtsman) தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல கட்டட நிறுவனத்திற்கு கீழ்வரும் தொழிலுக்கு ஆட்கள் தேவை.
பெண் பட வரைஞர் ( Draughtsman )
QS (Quantity Surveyor) 3D Designer
சம்பளம் தகைமைக்கு ஏற்றவாறு பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
075 922 5531, 070 722 5531
(CS 27688) A-1

# நெருக்கடியை சமாளியுங்கள்!

*கல்வி அமைச்சர் அறிவுரை*

கொழும்பு, ஜன.18

உற்பத்திப் பொருளாதாரத்தை ஒரே நாளில் கட்டியெழுப்பமுடியாது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முழுநாடும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியின் கீழ் நாட்டின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இந்தப் பின்னணியில் அரசாங்கம் மற்றும் நாட்டின் ஏனைய நிறுவனங்கள் உட்பட நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஏற்படவுள்ள நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ளச் சரியான முறையில் தயாராக வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி A-9 வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1Km மெயின்றோட்டுடன் உள்ளது
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

071 1733 911
076 8535 022
(CS 53539) S-1

**வேலை ஆட்கள் தேவை**

யாழ். நகரத்தில் அமைந்துள்ள
பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை.
சமையலறை சுத்திகரிப்பாளர்
(ஆண்)
070 745 8567, 070 716 3756

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 24 . 05 . 1951
மறைவு 29 . 01 . 2023

**அமரர் சறோஜினிதேவி புஷ்பநாதன்**

(பங்காளர் - துர்க்கா பொத்தகச்சோலை, சுன்னாகம்)

நேற்று எம் அன்னையாய்
இன்று எம் அருளினியாய்
என்றும் எமது இறைவியாய்
வாழும்
எமது அன்புத் தெய்வத்தை
நன்றியுடன் நினைவு கூருகிறோம்


நாளை (19.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நிகழும் எங்கள் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி பிரார்த் தனையைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புரிமையுடன் வேண்டிநிற்கின்றோம்.

தேவி வாசா
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(CS 27574) A-1

**27ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 31 . 08 . 1964
மறைவு 16 . 01 . 1997

**சீவரத்தினம் உதயகுமார்**

(கலட்டிக்கண்ணன் )

திதி: அட்டமி

தீரனே உமை தீ தழுவி
தீராத் துயர் கொண்டு
திவசங்கள் இருபத்தேழாயினும்
திசையாவும் உன் தோரணை கண்ணா!

தாதை உம் பெயர் கேளா
தினம் இன்னும் விடியவில்லை
திக்கெட்டும் தோழமை கொண்டே
திகழ் பெரு அடையாளம் தந்தீர்!
தீயெனத் தூய்மையாய்
தீயெனத் திண்மையாய்
தீயெனத் துடிப்பாய் வாழ்ந்தீர்! - அதே
தீயின் பிளம்பாய் வழிகாட்டும் என்றும்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்

(CS 27695) S-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org